


**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி *AASL* *ஆகிய நாம் சிறந்த திறமையாளர்களைச் சிறந்த நிறுவனத்திற்குப் பணியமர்த்துவதுடன் அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்குகின்றோம்***

***கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை, மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் இரத்மலானை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, சரியான மனப்பான்மையுடன் கூடிய, மிகுந்த ஊக்கமுள்ள நபர்களை நாங்கள் தேடுகிறோம்:***

## மருத்துவ உதவியாளர் நிலை I (ஆண்) பதவி
## மருத்துவ உதவியாளர் நிலை I (பெண்) பதவி

1. **தொழிலின் பரப்பெல்லை** : விமான நிலைய மருத்துவப் பிரிவின் மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள், சேவை நோக்கங்களை அடைய உதவுதல். மருத்துவப் பிரிவிற்கு மருத்துவ சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மற்றும் யுயுளுடு பணியாளர்களின் தேவைகளைக் கவனித்தல். மருத்துவப் பிரிவின் அலுவலகப் பணிகளுக்கு உதவுதல்.

2. **பிரதான பொறுப்புக்கள்** :
   - நிறுவன மருத்துவப் பிரிவின் அன்றாடப் பணிகளைச் மேற்கொள்வதற்கு செவிலியர் அதிகாரிக்கு உதவுதல்.
   - மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களைச் சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்தல்.
   - காயக்கட்டுகளைத் தயாரித்து கிருமி நீக்கம் செய்தல்.
   - நோய்வாய்ப்பட்ட மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள பயணிகள்.்.பணியாளர்களை அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லுதல்.
   - மருத்துவப் பிரிவை எப்போதும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்.
   - படுக்கை விரிப்புகளைத் தயாரித்து, பயன்படுத்திய விரிப்புகளை சலவைக்கு அனுப்புதல்.
   - மருத்துவப் பிரிவின் இருப்பைச் சரிபார்க்க செவிலியர் ஊழியர்களுக்கு உதவுதல்.
   - மருத்துவப் பிரிவின் மருத்துவ மற்றும் மருத்துவம் அல்லாத பணிகளுக்கு உதவுதல், பணியில் உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர் ஊழியர்களின் அலுவலகப் பணிகளுக்கு உதவுதல் மற்றும் நிறுவன மருத்துவ அதிகாரியின் அலுவலகப் பணிகளுக்கு உதவுதல்.
   - நிறுவன மருத்துவ அதிகாரி அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஒதுக்கப்படும் வேறு எந்தப் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

02/-

**3. தகைமைகள்**

1) ஆங்கில மொழி.ஃ. சுகாதாரக் கல்வி ஆகிய பாடங்களுடன் க.பொ.த (சா.ஃ.த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**மற்றும்**

2) செல்லுபடியாகும் சீபீஆர் சான்றிதழை வைத்திருக்க வேண்டும்.

**மற்றும்**

3) தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் நான்கு (04) வருட அனுபவத்தினைப் பெற்றிருக்க வேண்டும்,

**4. வயது** : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 35 வயதிற்குக் குறைவானவராகவிருத்தல் வேண்டும்.

**5. தெரிவு முறை** : ஒரு செய்முறைப் பரீட்சை மற்றும் நேர்காணல் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**6. சம்பளம்** : தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியப் பொதி வழங்கப்படும். அதுமட்டுமின்றி, அவர்களுக்கு கவர்ச்சிகரமான இதர சலுகைகளும் வழங்கப்படும்.

<u>பொதுவானவை</u>

மொழி : **ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் நல்ல எழுத்துமூலமான மற்றும் வாய்மொழித் தொடர்புத் திறன் தேவை. தமிழ் மொழியில் பரிச்சயம் இருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.**

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் (JIA) உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு, வட மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, நிறுவனம் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்காது.**

நீங்கள் ஆர்வமுள்ளவராகவும், உரிய தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றவராகவும் இருந்தால், எங்கள் இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி தயாரிக்கப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன், <u>**பதிவுத் தபால் அல்லது கூரியர் சேவை மூலம் 2026 *அக்டோபர்* 01**</u> ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ***தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க*** எனும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள், பிற முறைகளில் அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள், எங்கள் இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்பத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பிறகு இந்த அலுவலகத்திற்குப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**இந்த வேலைவாய்ப்பு விளம்பரத்தை இரத்து செய்யவோ அல்லது பெறவோ நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்பதையும் தெரிவுச் செயல்முறையின் அனைத்து மட்டங்களிலும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும் என்பதையும் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.**

இந்த அறிவிப்பின் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள உரையே மேலோங்கும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

**விளம்பரப்படுத்தப்பட்டது: 2026/09/13**